விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 17 திங்கட்கிழமை (02.09.2002) தொலைபேசி 3378 ஒலி 257

### தாய்லாந்தில் 16, 17, 18ல் நடைபெறும்

# சமாதானப்பேச்சுக் குறித்து அரசு இதுவரை எனக்கு அறிவிக்கவில்லை

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கண்டி)

**இம் மாதம் 16ம் திகதி முதல் 18ம் திகதிவரை தாய்லாந்தில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசு இன்று வரை எந்தவிதமான அறிவித்தலும் தனக்கு வழங்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கவலை தெரிவித்துள்ளார்.**

கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 57வது வருடாந்த மகாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கவலை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு தான் விரும்பி முன்வந்துள் போதும் அரசில் உள்ள ஒருசிலர்



இதனை விரும்பவில்லை.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைக்கு முன்பாக விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குதவதற்கோ பேச்சுவார்த்தையின்

(08ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் தடை நீக்கத்தை எதிர்த்து

## தலைநகர் கொழும்பில் இன்று பிக்குகள் கண்டனப் பேரணி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாது என்று கோரி இன்று அரசுக்கெதிரான கண்டனப்பேரணி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

தேசிய பௌத்த பிக்குமார் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இக்கண்டனப் பேரணி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பெருமளவான பிக்குகள் திரண்டு புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு எதிர்புத் தெரிவித்து பேரணியில் ஈடுபடுவர்.

இதேவேளை புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று கிரா

(08ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி வடமேற்கு பிரதேசசபையின் புதிய கட்டடம் சேதமாக்கப்பட்டது

### இனம் தெரியாதோர் கைவரிசை

(மந்திகை)

மாலுசந்தியில் அமைந்துள்ள வடமராட்சி வடக்குத் தெற்குப் பிரதேசசபையின் புதிய கட்டத்தொகுதி கடந்த சனிக்கிழமை இரவு இனந் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டதுடன் கட்டடப்பகுதி எங்கும் கழிவு ஓயில் பூசப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட இக்கட்டடத்தொகுதிக்குள் நள்ளிரவு புகுந்த இனந்தெரியாத குழுவினர் கட்டட இரவுக் காவலாளியின் வாயினுள் துணியை அடைந்து அவரைக் கட்டி விட்டு புதிய கட்டடத்தைச் சேதப் படுத்தியதுடன் கழிவு ஓயிலை எங்கும் பூசி கட்டடத்தை அசிங்கப்படுத்தியுள்ளனர்.

இன்று திறப்புவிழா கொண்டாடப் படவிருந்த இப்புதிய கட்டம் சேதப் படுத்தப்பட்டமை தொடர்பாக நெல்லியடிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் பயன்பாட்டிற்கென அங்கு வைக்கப்பட்டிருந்த

(08ம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் செயலாளர் பிரட்மன் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் நடுவப் பணியகத்தில் நீண்ட நேரமாக இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

பிரதமரின் பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரட்மன் வீரக்கோன் நேற்று ஏ-9 கண்டிவீதி தரைவழிப்

(08ம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில்

## வாழைச்சேனை

## பிரதேசசபைக் கட்டடத்தை

## இனம் தெரியாதோர் கைவரிசை

(மந்திகை)

மாலுசந்தியில் அமைந்துள்ள வடமராட்சி வடக்குத் தெற்குப் பிரதேசசபையின் புதிய கட்டத்தொகுதி கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டதுடன் கட்டடப்பகுதி எங்கும் கழிவு ஓயில் பூசப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட இக்கட்டடத்தொகுதிக்குள் நள்ளிரவு புகுந்த இனந்தெரியாத குழுவினர் கட்டட இரவுக் காவலாளியின் வாயினுள் துணியை அடைந்து அவரைக் கட்டிவிட்டு புதிய கட்டடத்தைச் சேதப்படுத்தியதுடன் கழிவு ஓயிலை எங்கும் பூசி கட்டடத்தை அசிங்கப்படுத்தியுள்ளனர்.

இன்று திறப்புவிழா கொண்டாடப் படவிருந்த இப்புதிய கட்டம் சேதப்படுத்தப்பட்டமை தொடர்பாக நெல்லியடிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் பயன்பாட்டிற்கென அங்கு வைக்கப்பட்டிருந்த

(08ம் பக்கம் பார்க்க)

(கிளிநொச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின நடுவப் பணியகத்தில் நீண்ட நேரமாக இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

பிரதமரின் பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரட்மன் வீரக்கோன் நேற்று ஏ-9 கண்டிவீதி தரைவழிப்

(08ம் பக்கம் பார்க்க)

### பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில்

# முரளி களமிறங்கி ஆடிய யாழ் கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலகின் முதற்தரச் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் யாழ் மண்ணில் களமிறங்கி ஆடிய முதலாவது கிரிக்கெட் ஆட்டம் நேற்று யாழ் மத்திய கல்லூரியில் மிக விறுவிறுப்பாக இடம்பெற்றது.

சர்வதேச ஆட்டக்காரனான முரளி கலந்து கொண்ட ஜனசக்தி காப்புறுதி அணிக்கும் யாழ் மாவட்டக் கிரிக்கெட் அணிக்கும் இடையில் பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் போட்டி கோலாகலமாக ஆரம்பமானது.

மட்டுப்படுத்தப்பட்ட 30ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் ஜனசக்தி அணி 6விக்கெட் இழப்பிற்கு 192

(08ம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை வீதி இன்று திறப்பு

(மட்டக்களப்பு)

கடந்த 12வருடங்களாக மூடப்பட்டிருந்த வாழைச்சேனை பிரதான வீதி இன்று முதல் பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இன்று மாலை 4மணிக்கு இவ்வீதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படுமென வாழைச்சேனை சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் புளிமாத்தையா தெரிவித்துள்ளார். (த)

# பிரதேசசபைக் கட்டடத்தை புலிகளே தாக்கினராம்!

### ஈ.பி.டி.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபையின் புதிய அலுவலகம் கடந்த சனிக்கிழமை இரவு விடுதலைப்புலிகளால் தாக்கிச் சேதமாக்கப்பட்டதாக ஈ.பி.டி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

பிரதேச சபை புதிய அலுவலகம் சேதமாக்கப்பட்டமை தொடர்பாக ஈ.பி.டி.பி நேற்று வெளியிட்ட பத்திரிகை அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடமராட்சி தென்மேற்குபிரதேச சபையின் புதிய அலுவலகம் 01.09.2002 அதிகாலை 1மணியளவில் வாகனம் ஒன்றில் வந்த புலிகளால் தாக்கிச்

(08ம் பக்கம் பார்க்க)

## அரசின் சமாதான முயற்சிக்கு மல்வத்த பீடம் பூரண ஆதரவு

### பீடாதிபதி விபல்சிசாரதேரர் உறுதி

(கண்டி)

அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லுகின்ற சமாதான நடவடிக்கைகளுக்கும் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கும், பூரண ஆதரவு வழங்குவதாக மல்வத்த பீடாதிபதிரம்புக்வெல விபல்சிசார தேரர் தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மல்வத்த பீடாதிபதி விபல்சிசார தேரரை நேற்று கண்டியில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின்போதே தேரர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள முதல்சுற்றுப் பேச்சுவார்த்தை அங்கு பேசப்படவுள்ள முக்கிய விடயங்கள் மற்றும் புலிகள் மீதான தடை

(08ம் பக்கம் பார்க்க)

### வங்கிகளில் கோடிக்கணக்கான ரூபா வைப்பு

# அனுருத்த ரத்வத்த குடும்பத்தின் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்படும்

(கொழும்பு)

பல மில்லியன்கள் பெறுமதியான பண வைப்புப் பத்திரங்கள் தனியார் வங்கி ஒன்றின் பாதுகாப்புப் பெட்டகங்களில் இருந்து சி.ஐ.டியினரால் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை வைப்புச் செய்திருந்த அனுருத்த ரத்வத்த குடும்பத்தினர் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. இதற்கான உத்தரவை சட்டமா அதிபர் வழங்கியதும் சி.ஐ.டியினர் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் இதற்கான ஆதாரங்களை கையளிப்பர். அத்துடன் கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் பெட்டகங்களை கடந்த புதன்கிழமை அன்று பரிசோதனை செய்யச் சென்ற அதிகாரிகளை அவர்களின் கடமைகளைச் செய்யவிடாது தடுத்ததற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றியும் சி.ஐ.டியினர் ஆலோசித்து வருகின்றனர்.

இதேவேளை பெட்டகங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பண வைப்புச் சான்றிதழ்களில் எவரின் பெயரும் எழுதப்படவில்லை எனவும் அவற்றை தனது நண்பர்கள் உறவினர்கள் கொடுத்ததாகவும் ரத்வத்த சி.ஐ.டியினருக்குத் தெரிவித்தார். அத்துடன் எம்.பியாகிய இவர் தமது சொத்துக்களை வெளியிடாதிருந்த

(08ம் பக்கம் பார்க்க)

# யாழ். கிரிக்கெட் வீரர்களை சர்வதேச தரத்துக்கு உயர்த்த நிச்சயம் உதவுவேன்

## முத்தையா முரளிதரன் உறுதி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்திலுள்ள ஜனசக்தி காப்புறுதித் திட்டத்தின் மாவட்டக் கிளையின் செயலகத் திறப்பு விழாவை முன்னிட்டு நேற்றைய தினம் யாழ் நகருக்கு வருகை தந்திருந்த இலங்கையின் கிரிக்கெட் முன்னணி நட்சத்திரமும் உலகின் முதல்தர சுழல் பந்துவீச்சாளர்களில் ஒருவரான முத்தையா முரளிதரனுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மானிப்பாய் வீதியிலுள்ள ஜனசக்தி காப்புறுதி மாவட்டச் செயலகம் வரையிலான வீதியெங்கும் வாழைகள் நாட்டப்பட்டு, ஜனசக்திக்கொடிகள் மற்றும் பதாகைகளும் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து முத்தையாமுரளிதரன்மற்றும் கிரிக்கெட் வீரர்கள் ஆகியோர் வாகனங்களின் அணி மூலம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாகன அணியில் ஆட்டோக்கள், கார்கள் மற்றும் வாகனங்களும் சென்றன.

முத்தையா முரளிதரன் ஜனசக்தி செயலகம் வந்தடைந்ததும் நிறுவனத்தின் நிர்வாகப் பணிபாளர் சந்திரா காவ்டா முரளிதரனுக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

இதனைத்தொடர்ந்துமுரளிதரன் அங்கு சமுகமளித்த பிரமுகர்களுடன் அளவளாவினார்.

அவ்வேளையில் அங்கு குழுமியிருந்த நூற்றுக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள், பாடசாலை மாணவ- மாணவிகள் முரளிதரனிடம் ஆட்டோகிராபில் கையெழுத்து வாங்கினர்.

அதனையடுத்து நிர்வாகப் பணிப்பாளர் சந்திராகாவ்டா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றும்போது யாழ்ப்பாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு ஜனசக்தி திட்டத்தின் சேவை அவசியம் தேவையாகவுள்ளது ஏ- 9 பாதை திறக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் தொழில்வாய்ப்புகள் பெருமளவில் அதிகரித்து வருகின்றன ஜனசக்தி திட்டம் யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பிப்பது குறித்து நாம்மிகவும் பெருமையடைகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

நேற்றையதினம் தமிழீழ விளையாட்டுப் பகுதியின் பொறுப்பாளர் இன்பம், முத்தையா முரளிதரனைச் சந்தித்து, தமிழீழ பகுதியில் கிரிக்கெட் விளையாட்டினை மேன்மையடையச் செய்வதற்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும்படி கோரினர்.

மேலும், சர்வதேச தரத்திலான கிரிக்கெட் வீரர்கள் மாதம் ஒரு தடவையாவது யாழ்ப்பாணம்வந்து இங்குள்ள வீரர்களுடன் விளையாட வேண்டும் அதன் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள கிரிக்கெட் வீரர்களை சர்வதேச தரத்துக்கு உயர்த்த முடியும். அதற்கான ஆரம்பப் பணிகளை நான் நிச்சயம் மேற்கொள்வேன்என்று முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

(க- 77)

## குடும்பஸ்தர் காயம்

(மந்திகை)

வீதியில் கட்டப்பட்டிருந்த மாடு குறுக்காக பாய்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் மணல்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அப்பகுதியைச் சேர்ந்த எ.வீரசிங்கம்என்பவரேபடுகாயம் அடைந்தநிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டவராவர். (க-23)

## முதியோர் விபரம் திரட்டல்

(கொழும்புத்துறை)

எழுபது வயதை கடந்தமுதியோரை சௌரவிக்கும்நிழ்வு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

ஆண்டு தோறும் நடைபெறும் இந் நிகழ்வில் செரிவு செய்யப்படுவோர் குறித்த விபரங்களை திரட்டும் பணியில் அரியாலை அபிவிருத்திச்சங்கத்தினர்ஈடுபட்டு வருகின்றனர். (க-262)

## இராசி பலன்

2 9 2002

(ஆவணி 17திங்கள்)

தசமி பி ப4.52வரை

திருவாதிரை பி.இ 1 01வரை

இராகுகாலம் 7·35-9 05

நல்லநேரம் 12.05-1.35

சித்தாமிர்தம்

**மேடம்**
காரியஅனுகூலம், வாக்கு மேன்மை, இனியசம்பவம் புதியபொருள் சேர்க்கை

**இடபம்**
மனக்கிலேசம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம் மாதர்நட்பு

**மிதுனம்**
ஜனவசியம். ஆழ்ந்தசிந்தை பொருள்சேர்க்கை, காரிய அனுகூலம்

**கடகம்**
மனச்சஞ்சலம்,பிரயாணம், சயனசுகக்குறைவு, பொருள் விரயம்

**சிங்கம்**
உஷ்ணநிலை, தெய்வசிந்தை, நண்பர்கள்சந்திப்பு முயற்சிநிறைவேறும்

**கன்னி**
உற்சாகம், பிறர்உதவி, செய்தொழில்விருத்தி,அதிகாரம்

**துலாம்**
ஆன்றோர்ஆசி, உடல் உழைப்பு, காரியதாமதம் பிரயாணம்

**விருச்சிகம்**
அமைதிக்குறைவு,உறவினர் வெறுப்பு, காரியதாமதம் போசனசுகம்

**தனுசு**
தெய்வதரிசனம், குடும்ப சுகம், பிரயாணநன்மை முயற்சிகைகூடும்

**மகரம்**
சத்துருஜெயம், சாரியஅனுகூலம், தனவரவு, சந்தோச மானசம்பவம்

**கும்பம்**
சிறுவியாதி, வியாபாரநன்மை, புத்திரரால்கவலை முயற்சிதாமதம்

**மீனம்**
தன்நம்பிக்கைக்குறைவு அற்பர்உறவு,முயற்சிதாமதம் ரோசபயம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்கேணல் திலீபனின் 15 ம் ஆண்டு நினைவு நாள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10மணிக்குவலிகிழக்கு அரசியல் துறை - நீர்வேலியிலுள்ள செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்ட அனைத்து பொது அமைப்புக்களின் தலைவர் செயலாளர் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த)

# தலதாமாளிகையை தாக்கியதற்காக புலிகளின் தடையை நீடிக்கக்கூடாது

## பத்தேகம சமித்ததேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தலதாமாளிகையை தாக்கினார்கள் என்பதற்காக புலிகள்மீதான தடைஅகற்றப்படக்கூடாதென்று அர்த்தம் கொள்ளமுடியாது சமாதானத்தை வென்றெடுப்பதற்காகப் புலிகள் மீதான தடையை அகற்றுவதே சிறந்தது

இவ்வாறு பத்தேகமசமித்த தேரர் (சமசமாஜகட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்) தெரிவித்திருக்கிறார் பொ. ஐ முன்னணியினால் முடியாதுபோன சமாதானப் பேச்சுவிவகாரத்தை ஐ.தே. முன்னணி முன்னெடுப்பதை வரவேற்போம்.

பேச்சுக்களுக்கு ஒருநிகதியை குறிக்குமளவுக்கு விடங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைவோம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதிலிருந்து மனித அழிவுகள் நிறுத்தப்பட்டுவிட்டன அதனையும் மகிழ்ச்சியுடன் வரவேற்போம். முழுமையானசமாதானமே தேவை அதனை கொண்டுவருவதற்கு இந்தஅரசு பெருமளவு பாடுபடுகிறது இவ்விடையத்தில் ஒவ்வொருவரும் அரசுக்கு தமது ஆதரவை அளித்தல் வேண்டும்.

பௌத்தர்களென்ற வகையில் அவர்கள் கொன்றார்கள் அதனால் நாமும் கொன்றோம் என்றுஎம்மால் கூற முடியாது ஒரு தடைசெய்யப்பட்ட இயக்கத்துடன் மக்களால்தெரிசெய்யப்பட்ட அரசின் பிரதிநிதிகள் பேசுவது சட்டவிரோதமானது இதனால் தடை அகற்றப்பட வேண்டும் எதிர்க்கட்சிகளின் பிரதான கடமை சமாதானத் திட்டத்தைத் மனமார ஆதரிப்பதாகும்

சிஹல உறுமயவை நாம் புறக்கணித்துவிட்டு விடலாம். அது மக்கள் மத்தியில்ஒருதாக்கத்தையும் ஏற்படுத்தாது, அது போலவே ஜே வி. பியும் தனிமையாக இருக்கிறது சமாதான விடயத்தில் பொ. ஐ மு அரசுக்கு ஆதரவு தருகிறது· மகாசங்கம் ஆதரவளிக்கிறது ஜே. வி. பி.யின் எம். பி.க்கள் இருந்தாலும் அது தனிமைப் படுத்தப்பட்டதே சமாதானத்தை கொண்டுவருவதற்காக பிரதமரும் புலிகளும் முன்னெடுக்கும் முயற்சிகளுக்காக அவர்களைப் போற்றுவோம் இவ்வாறு தேரர் தெரிவித்தார்.

இதேவேளை, தடைநீக்கத் திற்கெதிரான ஆர்ப்பட்டத்திற்காக இன்று பி.ப. 2 30 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் ஒன்றுசேருமாறு ஜாதிக சங்க சம்மேளனம் என்ற பௌத்த பிக்குகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (ந

## பாவனைக்கு உதவாத மரக்கறி எண்ணெய்

(வவுனியா)

தென்பகுதியிலிருந்து வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்ட சுமார் 50 பீப்பா மரக்சறி எண்ணெய் பாவனைக்கு உதவாதுஎன வவுனியா மாவட்ட சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இரசாயனப் பொருள் வந்த பீப்பாக்களில் இந்த மரக்கறி எண்ணெய் எடுத்து வரப்பட்டதால் உணவுத் தேவைக்கு இந்த எண்ணெய் பாவிப்பதற்கு சுகாதாரப்பகுதியினர் தடை விதித்திருப்பதுடன் 50 பீப்பா மரக்சறிஎண்ணெயையும் (சுமார் 10 ஆயிரத்து500 லீற்றர்) அழிப்பதற்கு முடிவு செய்துள்ளனர். (ம)

## இரு அதிரடிப்படையினர் பொத்துவிலில் கைது

(மட்டக்களப்பு)

தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு சட்டவிரோதமாகசுமார்200லீற்றர்டீசலை விற்பனைசெய்த அதிரடிப் படை உத்தியோகஸ்தர்கள் இருவரை பொத்துவில் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவ்விருவரும் பொத்துவிலில் உள்ள பெற்றோல்நிலையம் ஒன்றிலிருந்து சுமார் 500 லீற்றர் டீசலைஅதிரடிப் படையின் பாவனைக்காக எடுத்ததாகவும் அதில்இருந்த 200லீற்றர் டீசலே திருட்டுத்தனமாக விற்பனை செய்யப்பட்டதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விருவரும் இன்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (க-8)

## கூட்டத்தில் ரகளை குடும்பஸ்தர் தப்பிஓட்டம்

(நவாலி)

நவாலியில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற சமுர்த்தி அபிவிருத்திக் கூட்டத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தகாதவார்த்தைப் பிரயோசங்களை மேற்கொண்டதுடன் கூட்டத்தை நடத்தவிடாது மேசைகளைத்தள்ளி விழுத்தி ரகளை புரிந்துள்ளார்.

ஜே-134 சமுர்த்திஅலுவலர் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற இக்கூட்டத்திலேயே நவாலி வடகரைச்சேர்ந்த நபர் இவ்வாறு ரகளைபுரிந்தார்.

இதுவிடயம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸார் சம்மந்தப்பட்டவரை கைதுசெய்வதற்கு வந்தபோது அவர்அங்கிருந்து தலைமறைவாகியுள்ளார் (த-228)

## நல்லைக்குமரன் மலரின் 10வது வெளியீடுஇன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டு விழா இன்று காலை 9. 00மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். மாநகர ஆணையாளர் இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை குழுவின் செயலாளர் இரா. இரத்தினசிங்கமும், ஆசியுரைகளை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்இந்துமதகுரு பீடாதிபதி சிவஸ்ரீஐ மகேஸ்வரக்குருக்கள்சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வழங்க, சிறப்புரையை மாநகர முதல்வர் செ. கந்தையன், ஆசிரியர் ஆறுதிருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை மலரின் பதிப்பாசிரியர் ந. விஜயசுந்தரமும், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி மா. வேதநாதனும்நிகழ்த்துவர். குழுவின் பொருளாளர் து சோமசுந்தரம் நன்றியுரையை ஆற்றுவார்.

வெளியீட்டுக்கு முன்னதாக செல்வி பரமேஸ்வரி கணேசனின் பண்ணிசையும் இடம் பெறும்.

## நல்லூரான் திருவடிக்கு-21



### "வாழ்வதனை அளிக்கும் வேல்"

சங்கரர்க்கு ஞானகுரு ஆன வேல்
சரவணப் பொய்கையிலே உதித்த வேல்
திங்கள் போ வாறு முகம் கொண்ட வேல்
சிறையினிலே பிரமனை அடைத்த வேல்
செங்களத்தில் அசுரரை அழித்த வேல்
சைவர்களின் நாவினிலே நிறைந்த வேல்
எங்கள்பதி நல்லையிலே அமர்ந்த வேல்
ஏற்ற முறு வாழ்வதனை அளிக்கும் வேல்

அரியாலையூர் சி.சிவதாசன்

### உனைத் தேடி வந்தோம்

நற்கருணை பொழியும் கலியுகக் கந்தனே
நல்லூர் நாடி நாம் ஓடோடி வந்தோம்
முந்தை வினை தனை முடித்து வைப்பவனே
சிந்தை குளிர்ந்திட ஆடியாடி வந்தோம்
அடியார் குறை தீர்க்க அவதரித்தவனே
பெரும் அல்லல் தீரஉனைத் தேடி
- வந்தோம்

வ.காந்திமதிநாதன்

### பொறுப்பு உன்னுடைத்தே

எடுப்பு
புவனம் முழுதுக்கும் நீ தந்தை- எங்கள்
புன்மை பொறுக்கும் உன் தன் சிந்தை
தொடுப்பு
கவனம் சிறிது எங்கள் மீது- நீ
காட்டி வைத்தால் என்ன தீது?
முடிப்பு
தங்கத் தமிழ் நல்லை முதல்வன்- நீதான்
சங்கப் புலவர்க் கெல்லாம் தலைவன் -
இங்கிப் பழி பவங்கள் துடைத்தே- உயர்வு
ஏற்றும் பொறுப்பும் உன்னுடைத்தே!
முருகா!

நிவேதிதா

### விடிவு தரும் கருணை வேல்!

நாடி வரும் அன்பருக்கு நலமளிக்கும் கருணை வேல்
நல்லைதனில் கோயில் கொண்ட அலங்காரத் தங்க
வேல்
வாடிவரும் மனங்களுக்கு விடிவு தரும் அன்பு வேல்
வள்ளிதெய்வானையுடன் காட்சி தரும் செல்வ வேல்
ஆடிவரும் காவடிகள் தாங்கிவரும் அடியவரின் சக்தி
- வேல்
அமரர்சிறை மீட்டெடுத்த அற்புதமாம் வீரவேல்-
பிறை
சூடிவரும் பெருமானின் மைந்தனவன் சதிர்வேல்
குன்றுதோறாடுகின்ற கொஞ்சுதமிழ்க் குமரவேல்!

நாயன்மார்கட்டு ப மகேந்திரதாசன்

### வாழத் தேச மொன்றீயாயோ

நல்லூரில் கந்தனைச் சந்திக்க நான்
வந்த சங்கதி தான் என்னவோ- எங்கள்

சந்திப்படை வீட்டுச் சங்கடங்கள் நீங்கி
ஷெல் குண்டும் ஓய்ந்தது வோ

செந்தமிழர் தினம் செத்து மடிந்திட்ட
வெஞ்சமர் ஓய்ந்தது வோ- இங்கு

அந்தரமாய் ஓடும் அகதி எம்
வாழ்வினில் ஆறுதல் வந்ததுவோ

பொங்கு தமிழ் மைந்தர் வாடும் சிறை
மீட்க தேரினில் வாராயோ-எந்தன்

சந்ததியாவது நிம்மதியாய் வாழத்
தேச மொன்றீயாயோ

நயினை அம்பி

# மாணவர்களின் உயர் பண்புகளுக்கு வித்திடுபவர்கள்முன்பள்ளி ஆசிரியரே

## நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுடையகல்வி, ஒழுக்கம், பண்பாடு, தலைமைத்துவம், மனித விழுமியங்கள் போன்ற உயர் பண்புகள் வளர்வதற்கு களம் அமைக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் போற்றப்பட பாராட்டப்பட வேண்டியவர்கள். அவ்வகையில் நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி ஆசிரியர்களின் சேவை போற்றத்தக்கது பாராட்டத் தக்கது

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற வருடாந்த விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ குணநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டுறவு கிராமிய வங்கி உரும்பிராய் கிளை முகாமையாளர் க சுந்தரலிங்கம் தலைமையில்இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

கல்வி உளவியலாளர்களின்கருத்துப்படிகர்ப்பப்பையிலிருந்து கல்லறைவரையில் கல்வியானதுதொடர்கின்றது. எனவே சிறுவயதில் முன்பள்ளிகளில் வழங்கப்படும் கல்விப் பயிற்சியானது அம் மாணவனை சிறந்த முறையில் பிற்காலத்தில் கல்விகற்க வழி சமைக்கின்றது.

ஒரு பிள்ளையானது தனது முதலாவது வயதில் 03 சொற்களையும், ஒருவருடம் 06 மாதத்தில் 22 சொற்களையும், 02வருடத்தில் 272 சொற்களையும்கற்றுக்கொள் கிறது. இவ்வகையில் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டிற்கு வழி வகுப்பவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களே.

இத்தகைய விளையாட்டு நிகழ்வுகள் மூலம்சிறுவர்களின் உள,உடல் ஆற்றல்கள் வளர்ச்சி அடைவதற்கும். சமூக இயைபாக்கம் ஏற்படுவதற்கும் வழி ஏற்படுகின்றது.என்றார்.

வலி.கிழக்கு பிரதேசசபைச் செயலர் செ.குகதாசன், பொறுப்பாளர் தி.தவராசா, விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியும் சமாதான நீதிவானுமான நா சிவசீலன், தேவார இசைமணி தாவடியூர் தி திருஞான சம்பந்தன்யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ப கணேசலிங்கம், நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் சு.சண்முகவடிவேல் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க)

# முஸ்லிம் எம்.பிக்களுக்கு பேரியல் அஷ்ரப் அழைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, தேசிய ஐக்கியமுன்னணி(நுஆ) வின் தலைவிபேரியல் இஸ்மாயில் அஷ்ரப் அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டில் இருதசாப்தங்களாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், வடக்கு-கிழக்கு சகல கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து ஒன்றியம் ஒன்றை உருவாக்க வேண்டும்

இவ்வாறு உருவாக்கப்படவுள்ள இவ் வொன்றியத்தின் ஊடாகவே, முஸ்லிம்மக்கள் குறித்த பிரச்சினைகளின் தீர்வுயோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில்முஸ்லிம் காங்கிரஸ் (நுஆ ஆகியகட்சிகளில் 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர்அதனைவிட ஏனைய கட்சிகளிலும் உள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் உயர்ச்சியிலும், மீட்சியிலும், பங்குகொள்வார்கள் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க-8)

# லாண்ட் மாஸ்ரரிலிருந்து விழுந்த சிறுவர்கள் காயம்

(மந்திகை)

வேகமாகச்சென்ற லாண்ட் மாஸ்ரரின் முன்பகுதியில் இருந்து பயணம்செய்த சிறுவன் ஒருவன்தவறிவிழுந்ததில் படுகாயமடைந்தநிலையில் பருத்தித்துறைஅரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்

அல்வாய் கிழக்கு மாயக்கையைசேர்ந்த தம்பிஐயா தர்மசீலன் (வயது-13) என்ற சிறுவனே படுகாயமடைந்தவனாவான்.

இதேவேளையில் இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றொருசிறுவனானஉடுப்பிட்டியைச்சேர்ந்த மகாலிங்கம் பிரபாகரன் என்பவரும் காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-23)

# தாய்லாந்து சத்தாகிப் நகரில் அரசு-புலிகள் பேச்சு

(கொழும்பு)

அரசிற்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தாய்லாந்தின் தென்கிழக்கு துறைமுகமான சத்தகிப்பில் உள்ள கடற்படைத் தளத்தில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காகவே இக் கடற்படைத் தளத்தில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என தாய்லாந்து வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலந்து கொள்வதனால் அவரது சிறுநீரக நோய்க்கு சிகிச்சையளிக்கக்கூடிய வைத்திய சாலைகள் இத் துறைமுகத்திற்கு அருகில் இருப்பதனாலும், பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் இவ்விடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது (க-3)

# போலியோ சொட்டு மருந்து

(சுதுமலை)

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் இம்மாதம் 28 ஆம்திகதி போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளதாக கொழும்பு சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது

சகல 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்குமான இத் தடுப்பு மருந்து வழங்கும் திகதி இம் மாதம் 21 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

-252) (க

# ஆலயத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு இராஜ இராஜேஸ்வரி பேச்சி அம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கதவு உடைக்கப்பட்டு 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மண்ணெண்ணெய், தேங்காயெண்ணை உட்பட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (க-3)

# தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று திலகநாயகம் போலின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் நடைபெறவுள்ளது.

(க-3)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நடைபெற்றுவரும் தெய்வீக சொற்பொழிவில் இன்று ஆறு திருமுருகனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

(க-3)

# தெய்வீக நிகழ்ச்சியில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவை 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்ச்சியில் இன்று ''ஆன்மீகத்தில் அரிவையர்'' என்னும் பொருளில் அன்னைதாசன் ஆனந்தராசா குழுவினரின் இசைச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

(க—3)

# இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில்நல்லூர் உற்சவ காலத்தையொட்டி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசாமா நிகழ்த்தி வரும் மகாபாரதத் தொடர் இசைப் பேருரையில் இன்று 'பாஞ்சாலி சபதம்' என்னும் பொருளில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

(க-3)

# தியாகி லெப். கேணல் திலீபனின் 15வது நினைவுதினம் இம்முறையாழில்

## விரிவான முறையில் விழா ஏற்பாடுகள்

(பந்திகை)

தியாகி லெப் கேணல் திலீபனின் 15 வது நினைவு தினம் இம் மாதம் 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை யாழ். குடாநாட்டில் நடத்துவதற்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய அரசியல் கோட்ட ரீதியாக இவ் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிகழ்வுகளிற்கான விசேட ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்ததை அடுத்து இந் நிகழ்வு கடந்த 6 வருடங்களாக இடம்பெறாதிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சமாதான சூழலை அடுத்து இந் நிகழ்வு சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றமை நோக்கத் தக்கது.

(க-23)

# பருத்தித்துறையில் இன்று மாபெரும் மறியல் போர்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவைகள் இணைந்து 524 ஆவதுபடைத் தளத்தின் முன் இன்றுமறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

524ஆவதுபடைத்தளத்தை அகற்றக் கோரியும், தேவாலயம் மற்றும் குடியிருப்புக்கள் பாடசாலைகள் என்பவற்றை மக்கள் பாவனைக்கு விடக் கோரியும் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

(க-43(

# ஆத்ம பிரியானந்தரின் யாழ்ப்பாண விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொல்கத்தா ராமகிருஷ்ண மிஷன் வித்தியாமந்தீர் தலைவர் சுவாமி ஆத்மபிரியானந்தர், இலங்கை ராமகிருஷ்ண மிஷன் கிளையின் உப தலைவர் சுவாமி ஆத்மகாணந்தர் ஆகியோர் நாளை மறு தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளனர்;

இவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளின் விபரம் வருமாறு; 4ம் திகதி புதன் கிழமை மு.ப 11.0Cமணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்திலும், பி.ப. 2.00 மணிக்குயாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ''நேரமும் நேரம் கடந்த நிலை'' பற்றி உரையாற்றுவார்.

5ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் சுவாமி, விவேகானந்தரின் 'கல்விச் சிந்தனைகள்' என்னும் பொருளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு, மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ சத்தியசாயி நிலையத்தில் 'ஞானமும் பக்தியும் என்னும் பொருளிலும் மாலை 5.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சாயி ''நிலையத்தில் ஆத்மீகமும் உலகாயுதமும்'' என்னும் தலைப்பிலும் உரையாற்றுவார்;

6 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை9 00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும், காலை 10.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியிலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உரையாற்றுவார். (க-03)

# கஞ்சா வைத்திருந்த மூவர் கைதாகினர்

(கொழும்பு)

தென் பகுதியில்பின்னலப்பகுதியில் 80 கிலோநிறையுடைய 8லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவகைகள் வைத்திருந்த மூவரை கலால் திணைக்கள அதிகாரிகள் அண்மையில் கைதுசெய்து பின்னல பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்தவான்ஒன்றில் இக்கஞ்சாப் பொருட்கள் கடத்திச் செல்வது தொடர்பாக கிடைத்த தகவலை யடுத்தே சம்பந்தப்பட்ட நபர்களை கலால் கைது செய்துள்ளனர்.

(க-3)

# பேச்சுக்கு முன்னர் புலிகள் மீதானதடைநீக்கம் ஜனாதிபதி எதிர்ப்பு

(கொழும்பு)

தாய்லாந்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்அரசுக்கும் இடையான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன் தினம் மதகுருமாரும் கல்விமான்களும் பங்குபற்றிய கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; நாட்டின் முக்கியமான விடங்கள் குறித்த உடன் படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது குறித்த விடயத்திலும் அவர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து அமைச்சரவை இது வரை எந்த முடிவினையும் மேற் கொள்ளவில்லை அமைச்சரவைக் கூட்டத்தில் இத்தகைய ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் அதனையும் தான் எதிர்ப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (க-8)

# வடமராட்சி கிழக்கில் இரு இடங்களில் வீதிமறியல் போராட்டம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறக்கக்கோரி எதிர்வரும் 09 ம் திகதி ஒரேநேரத்தில் இரு இடங்களில் வீதிமறியல் போராட்டம் நடைபெறவுள்ளது:

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்உள்ள வடமராட்சி செம்பியன்பற்று பகுதியிலும், படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள குடத்தனை சந்திப் பகுதியிலும் இவ்வீதியை திறக்கக்கோரி இப்பகுதி பொது அமைப்புக்கள் போராட்டம் நடத்தவுள்ளன;

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும், படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் ஒரேநேரத்தில் நடைபெறும் போராட்டம் இதுஎன்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-43)

## இலவச பயிற்சி வகுப்புகள்

சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் இலவச கலைப்பயிற்சி வகுப்புகள் நேற்றுமுதல் நடைபெற்று வருகின்றன;

ஒகன், மிருதங்கம், நாடகமும் அரங்கியலும், வயலின், புல்லாங்குழல், அறநெறிக் கல்வி, வாய்ப்பாட்டு, நடனம், சித்திரமும் ஓவியமும் என்பன இடம்பெறவுள்ளன. (க)

# பயணிகள் பஸ் சேவை விஸ்தரிப்பு

(காரைநகர்)

காரைநகருக்கான பயணிகள் பஸ் சேவை நேற்றுமுதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது அத்துடன் 784ஆம் இலக்க சாலையினூடாக மீண்டும் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் இருந்து முதலாவது சேவை அதிகாலை 5.45 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கும், யாழில் இருந்து இறுதிச் சேவை மாலை 7.00 மணிக்கும் 784 ஆம் இலக்க பாதையினூடாக நடைபெறுகின்றது.

சென்ற வருடம் கடற்படையினரால் இப் பாதையின் பேருந்துச் சேவை தடை செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-246)

# கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதிகளிலே கட்டாக்காலி நாய்களின் தொல்லை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இக்கட்டாக்காலிகளால் பாடசாலை சென்று வரும் சிறுவர்கள் தொடங்கி முதியோர் வரைபயந்துடனேயே வீதியினால் சென்று வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் நாய்துரத்தி முதியவர் ஒருவர் காயமடைந்தது தெரிந்ததே.

(க-262)

# செயல்திட்ட விரிவாக்க விழா

(சங்கானை)

சித்தன் கேணியில் கலை, கலாசார சமூகமேம்பாட்டு நிறுவனம் செயல் திட்ட விரிவாக்க விழாவும், அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று இடம் பெற்றன.

மகாகவி நா வீரமணிஐயர் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

சித்தன்கேணி கணேசா வித்தியாசாலை அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் செல்வி. கே. ரஜனி, தொழிலதிபர் சி. சச்சிதானந்தன், கிராம அலுவலர் ஸ்ரீ முருகவேள் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(ச-123)

# அகதி முகாமில தங்கியிருந்த தொழிலாளர்கள் 40 பேர் தொற்று நோயால் மரணம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியா அகதிமுகாமில் தங்கியிருந்த சுமார் 40 சட்டவிரோத தொழிலாளர்கள் கடந்த மாதம் பல்வேறு தொற்று நோய்கள் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மலேசியாவிலிருந்து சட்ட விரோதமாக இந்தோனேசியாவுக்குள் புகுந்தவர்கள்எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாமில் தங்கியிருக்கும் மேலும் பல சட்டவிரோத குடியேற்ற வாசிகள் தொற்று நோய்களால் இறக்கும் அபாய நிலையில் உளளதாகவும் இந்தோனேசிய நிவாரணப் பணியாளர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, மலேசியாவின் சபாமாநிலத்தின் எல்லைக்கருகில் உள்ள நுணுக்கான் என்ற இந்தோனேசிய நகரில் சுமார் 25 ஆயிரம் தொழிலாளர்கள் ஆதரவு எதுவுமின்றி நோய்களால் தவித்து வந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மலேசியாத் தலைநகர் கோலாலம் பூரில் சட்டபூர்வ ஆவணங்கள் இல்லாதுஇருந்த சுமார் 6 இலட்சம் தொழிலாளர்கள் மீது மேற் கொண்ட நடவடிக்கையினை அடுத்தே அவர்கள் இந்தோனேசியாவிற்குள்பிரவேசிக்க ஆரம்பித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# யாழ். மாநகர சபையின் அனுமதி பெறாத வர்த்தக நிலையங்களுக்குத் தடை மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் அங்கீகாரம் பெற்ற வர்த்தக நிலையங்கள் மாத்திரமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும். அவ்வாறில்லாத வர்த்தக நிலையங்கள் தடை செய்யப்படும்.

நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவ கால வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ். மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

சிலர் அத்துமீறி வியாபாரம் செய்ய முற்பட்டு வருகின்றனர். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் முறைப்படி வியாபாரம் செய்ய அனுமதி கோருவோருக்கு தகுந்த இடம் வழங்கப்பட்டு வருவதாகவும், யாழ். மாநகர சபையின் அனுமதி பெற்ற வர்த்தக நிலையங்கள் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 2 மணி வரையும், இரவு 10.00 மணிக்குப் பின்னரும் பொருட்கள் கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-6)

# கத்தரிக்காய் விலை வீழ்ச்சி

(சங்கானை)

சங்கானைச்சந்தையில் கத்தரிக்காய் கிலோ 4 ரூபாமுதல் 5 ரூபா வரையில் விற்கப்படுகிறது.

இவ் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்;

(க-23)

# நெடுமாறனின் விருப்பத்தை ஜெயலலிதா நிராகரிப்பு

(சென்னை)

கர்நாடக அரசின் முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் நாகப்பாவை கடத்திச் சென்றுள்ள சந்தனமரக் கடத்தல் வீரப்பன் இரண்டாவது ஒலி நாடாவையும் கர்நாடக அரசுக்கு அனுப்பி வைத்துள்ளான்.

அந்த ஒலி நாடாவில் உள்ள கோரிக்கையின் விபரங்கள் வெளியிடப்படவில்லை, எனினும், 4 நாட்களுக்குள் அதிரடிப்படைகளை கர்நாடகாவின் காட்டுப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும். பேச்சு வார்த்தைக்கு தூதுவர்களை அனுப்ப வேண்டும், போன்ற நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது.

நாகப்பாவை விடுதலை செய்வதற்காக மூத்த வழக்கு அறிஞரும், பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வீரப்பனின் அனுதாபிகளை விடுதலை செய்தவருமான வேணுகோபால் மற்றும் சுப்புகிருஷ்ணா போன்றோர் தூது செல்வதற்கு இணங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என கருதப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் நாகப்பாவை மீட்க தூது செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள போதும், தமிழ் நாட்டு முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

(உ)

# இன்று ஒரு தகவல்

## நினைப்பதும் நடப்பதும்

ஓர் ஆள் இருந்தான் பலர் அவனைத்தேடித் தினமும் வந்துகொண்டிருந்தார்கள். அந்தஅளவுக்கு அவன் பெரிய மனிதன்என்று நினைக்கின்றீர்களா? அப்படிஇல்லை! அவன் எல்லாரிடமும் கடன் வாங்கிவிட்டான் சார்! கடன் கொடுத்தவர்கள் சும்மா இருப்பார்களா? தேடிவர ஆரம்பித்துவிட்டார்கள். பணம் தேவைப்படுகின்ற போதெல்லாம் அவன் கடன் வாங்கினான். கடனைத்திருப்பிக்கொடுக்கும் வகையில் அந்தப்பணத்தை வைத்து ஏதாவது தொழில்செய்ய வேண்டும் அல்லவா? செய்யவில்லை! சும்மா இருந்துவிட்டான். வாங்கிய பணத்தைச் செலவுபண்ணினான். அது தீர்ந்துபோனதும் மறுபடியும் கடன்வாங்கினான். செலவு செய்தான். கடன் அதிகமாகிவிட்டது.

கடன்கொடுத்தவர்கள் அடிக்கடிவந்து அவனைத் தொந்தரவுபண்ண ஆரம்பித்துவிட்டார்கள். கடனையோ இவனால் திருப்பிக் கொடுக்கமுடியாது. ஆனால் கடன்கொடுத்தவர்கள் தொல்லையோ நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே வந்தது. இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்கொள்வது எப்படி? என்று யோசனைபண்ணினான்! ஒருவழியைக் கண்டுபிடித்தான். பைத்தியம் பிடித்தமாதிரி பாசாங்கு பண்ணஆரம்பித்துவிட்டான். எல்லோரும் அதை நிஜம் என்று நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். ஆள் நிஜமாகவே மனநோயாளி (மென்டல் கேஸ்) ஆகிவிட்டான்; ஏதாவது செய்தாகவேண்டும் என்று சொந்தக்காரர்கள் முடிவுபண்ணி விட்டார்கள். வைத்தியர்களைக் கூட்டிக் கொண்டுவந்து காட்டினார்கள்.

வைத்தியர்கள் ஒவ்வொருவராக வந்தார்கள். அவனைப் பார்த்தார்கள். மருந்து கொடுத்துவிட்டுப் போனார்கள். மருந்து கொடுக்கக் கொடுக்க அவன் மிகவும் வேஷம்போட ஆரம்பித்துவிட்டான். பார்க்கிறவர்களுக்கு நோய் வரவர முற்றிக்கொண்டிருப்பதுபோன்று தெரிந்தது. அந்த வைத்தியர் சரியில்லை, இந்தவைத்தியர் சரியில்லை என்று நினைத்து உறவினர்கள் புதிது புதிதாக வைத்தியர்களைக் கூப்பிட்டுக் கொண்டுவர ஆரம்பித்தார்கள். எதிலும் அவன் சரியாவது மாதிரித் தெரியவில்லை. நடிப்பதில் அவன் மிகவும் உறுதியாக இருந்தான். அவ்வளவு கடன் வாங்கத் தெரிந்தவனுக்கு இதுகூடவா தெரியாது? பிரமாதமாக நடித்தான்.

கடைசியாக ஒரு வைத்தியர் வந்தார். நிறைய அனுபவம் உள்ளவர். அறிவாளி அவர் இவனைப் பரிசோதனை செய்தார். கையைப் பிடித்துப் பார்த்தார். நாக்கை நீட்டச் சொன்னார். அவன் முகத்தைக் கவனித்துப் பார்த்தார் ''இவனுக்கு உண்மையிலேயே பைத்தியம் இல்லை. இவன் நடிக்கிறான் என்பதை புரிந்துகொண்டார். உடனே அவனை..'' இப்படி என்னுடன் கொஞ்சம் வா என்று சொல்லித் தனியாக ஒரு அறைக்குள் அழைத்துக் கொண்டு போனார். பின்பு ''இதோ பாரப்பா! நீ இப்படிச் செய்வது சரியில்லை, வெகுகாலத்துக்கு நீ இதே மாதிரிப் பாசாங்கு பண்ணிக் கொண்டே இருந்தாய் என்று வைத்துக் கொள்! உனக்கு நிஜமாகவே பைத்தியம் பிடித்துவிடும். இப்போதே அதற்கான ஆரம்ப அறிகுறிகள் உன்னிடம் தெரிகிறது அதனால் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது'' என்றார்.

இதைக் கேட்டதும் அந்த ஆள் நிஜமாகவே மிகவும் பயந்துபோய்விட்டான். நிதானமாக யோசித்துப் பார்த்தான். வைத்தியர் சொன்னது நியாயமாகத்தெரிந்ததுதனது மனம் சிறிது மாறியிருப்பது போன்றுதெரிந்தது. 'ஆகா... ஏமாந்து போய் விட்டோம் என்பதைப் புரிந்து கொண்டான். அந்த நிமிஷமே அவன் பாசாங்கு செய்வதை நிறுத்தி விட்டான். பகவான் இராம கிருஷ்ணர் சொன்ன கதை இது.

இந்தக் கதையைச் சொல்லி விட்டு அவர் ''இடைவிடாமல் நீ எப்படியிருப்பதாகக் காட்டிக் கொள்கிறாயோ அப்படியே ஆகிவிடுவாய்! அதனால் நீ நல்லவனாக இருப்பதாக நினைத்தால்கூட நீ நல்லவனாக ஆகிவிட முடியும்'' என்று சொல்கிறார்.

அதனால் நாமெல்லோரும் வாழ்க்கையில் நடிக்க வேண்டுமென்றால் கூட நல்லவனாக நடிப்பதற்கு முயற்சி செய்வது நல்லது! நமது ஆள் ஒருவன் இந்தக் கதையில் வருகிற மாதிரியே நிறையக் கடன் வாங்கி விட்டு... பைத்தியக்காரன் மாதிரி நடிக்க ஆரம்பித்தான். அது நிஜம் என்று நம்பி அவனைச் சொந்தக்காரர்கள் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்கள்.

அவனைக் கொண்டுபோய் ஒரு அறைக்குள் தள்ளிக் கதவைச் சாத்தி மூடி விட்டார்கள். உள்ளே ஒரே இருட்டாய் இருந்தது. இவன் பயந்துகொண்டே ஒரு மூலையில் போய் உட்கார்ந்தான். அந்தச் சமயம் அங்கே இருந்த இன்னொருவன் மெதுவாக இவன் தோளில் கையை வைத்தான். இவன் நடுங்கிப் போய் விட்டான் விலகி ஓடினான். 'என்னைத் தொடாதே... நான் நிஜமாகவே பைத்தியம் இல்லை ஓர் ஆளிடம் நான் நிறையக் கடன் வாங்கி விட்டேன்... அவனுக்குப் பயந்துபோய் இப்படி நடிக்க ஆரம்பித்தேன்' அவ்வளவு தான் என்றான். 'உனக்குக் கடன் கொடுத்தவன் கூட உன் தொல்லைக்குப் பயந்து பைத்தியம் மாதிரி நடிக்க ஆரம்பித்து விட்டானே அது தெரியுமா?' என்றான் அந்த ஆள் அது எப்படி உனக்குத் தெரியும்? என்றான் இவன். 'நன்றாகக் கவனித்து என் முகத்தைப் பார், நான் தானடா அந்த அப்பாவி' என்றான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் நாளை 3 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பதில் பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச அபிவிருத்தி உட்பட முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட இருப்பதாகவும், கூட்டத்தில் கலந்து கொள்வோருக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-252)

# அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் எமது பிரச்சினையின் வேர்களை அறிந்துகொள்ளத் தவறிவிட்டன

### கரித்தாஸ் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

நாட்டில் சமாதானத்தையும், சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கானஇறுதி வாய்ப்பு இதுவாகும். இதனைத் தவறவிடின், முழுநாடும் வல்லரசு ஒன்றின் முழு ஆதிக்கத்துக்குட்படுத்தப்பட்டவாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு யாழ், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் அ. நல்லதம்பி நேற்றுமுன்தினம் இணையத்திற்கு வருகை தந்திருந்த அமெரிக்கா, நோர்வேபிரான்ஸ்சுவிஸ் நாடுகளைச் சேர்ந்த கரித்தாஸ் நிறுவனப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு அல்ல. இது முழுக்க முழுக்க விடுதலை அமைப்பாகும். கடந்த 50 வருடங்கள் நாட்டில் இருந்துவரும் இனப்பிரச்சினையை சுமூகமான முறையில் தீர்த்து வைக்க தமிழ்த் தலைவர்கள் முயன்றார்கள்.

ஆனால், அவர்களுடைய முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்நிலையில் 1987 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் அனைத்துத் தமிழ் மக்களும் ஈழக்கோரிக்கைக்கு சார்பானவர்களுக்கு வாக்களித்தனர் வடக்கு- கிழக்கில் வாழ்கின்ற அனைத்துத் தமிழ் மக்களும் தான் ஈழக்கோரிக்கையை முன்வைத்தனர். தமிழீழ விடுதலைப்புலிகள் அல்ல. தமிழ் தலைவர்களின் கோரிக்கை தோற்றதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தினர். இது விடயத்தில் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் எமது பிரச்சினையின் வேர்களை அறிந்துகொள்ளத் தவறிவிட்டன. தமிழ் மக்கள் இன்று அனைத்துத் துறையிலும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்துவருகின்றனர்.

இந்த நிலையில், நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் தென்பகுதியிலுள்ள இருபெரும்பான்மைக் கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும். தவறின் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு இரு அரசியல் கட்சிகளுக்குமிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் 20 வருடகால யுத்தத்தின் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாடு இன்று சகாரா பாலைவனம் போன்றே காட்சியளிக்கின்றதெனக் குறிப்பிட்டார்.

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவரான எஸ். பரமநாதன் அங்குகுறிப்பிடுகையில்.

இலங்கையில் அநீதி ஏற்படுத்துதல் சட்டமாகி விட்டது. எதிர்ப்புக்காட்டுதல் கடமையாகிவிட்டது இந்நிலையில் ஈழப்போராட்டம் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

அபிவிருத்தித் திட்டங்களுக்கென வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் நிதிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. திட்டங்கள் பற்றிய உரிய கண்காணிப்புகள் இருப்பதில்லை. மதிப்பீடுகள் செய்யப்படுவதில்லை. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்தின் முகவர்களாக மாறிவிட்டன.

நாட்டில் புதிய அரசியல் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். சிவில் சமூகத்தை நல்லபடியாகக் கட்டியெழுப்ப நாம் பாடுபட்டு வருகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் என். கந்தையா அங்குகுறிப்பிடுகையில்,

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் நாட்டில் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. அரசு படையினரின் தயவில் தங்கியுள்ளது. உயர்பாதுகாப்பு வலயங்கள், மற்றும்சோதனைச் சாவடிகள் பலப்படுத்தப்படுகின்றன எனக்குறிப்பிட்டார். (உ-77)

## பின்தங்கிய நிலையில் காரை தென்மேற்கு

(காரைநகர்)

காரைநகர் தென்மேற்கு பிரதேசமான கருங்காலி, பலகாடு, கிராமங்கள் அடிப்படை வசதிகள்எதுவும் இன்றி பின்தங்கிய பிரதேசமாக உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிமக்கள் மீளக்குடியமர்ந்து 6 வருடங்கள் ஆகியும் எவ்வித பொது வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை.

இப் பிரதேசத்திற்கு மின்சார இணைப்புகள் பொருத்தப்பட்டும் இன்றுவரை மின்சாரம் வழங்கப்பட வில்லை அத்துடன், போக்குவரத்தும் சீரில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-246)

## கரித்தாஸ் வெளிநாட்டுக்குழு இளம்பரிதியுடன் சந்திப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம்செய்திருந்த அமெரிக்கா, நோர்வே, பிரான்ஸ், சுவிஸ் நாடுகளைச் சேர்ந்த 'கரித்தாஸ்' நிறுவனப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினர்.

இச் சந்திப்பின்போது புரிந்துணர்வுடன் படிக்கை, மனித உரிமை மீறல்போன்ற விடயங்கள்பற்றி விரிவாகக் கலந்துரையாடினர் எனத் தெரிய வருகின்றது.

கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளர் வணபிதா சீ. ஜீ. ஜெயக்குமார் அடிகளும் இதில் சமுகமளித்திருந்தார் என்பதுகுறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## பாதாள உலக உறுப்பினர் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

கொழும்பு கிறான்பாஸ் பொலிஸார் இரு பாதாள உலக கோஷ்டி உறுப்பினர்களை அண்மையில் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்த இரு கைக்குண்டுகளும் மற்றும் ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கிறான்பாஸ் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சில ஆயுதங்களுடன் தலைமறைவாகியுள்ள இன்னொரு பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினரை பொலிஸார் தேடி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## இம்மாதம் நடுப்பகுதி முதல் வெலிக்கடைச் சிறைச்சாலை நீதிமன்றம் இயங்கும்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தவென வெலிக்கடைச்சிறைச்சாலையில் நிறுவப்பட்ட உயர் நீதிமன்றம் இம் மாதம் 15ஆம்திகதிமுதல் இயங்கவுள்ளது எனநீதிச் சேவை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காகவே இந் நீதிமன்றம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரலாற்றில் இவ்வாறு சிறைச்சாலை வளவு ஒன்றினுள் நீதிமன்றம் அமைக்கப்பட்டது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

### தியாகி திலீபன், கேணல் கிட்டு நினைவாக

## நல்லூர் ஆலய வீதியில் சிறப்புக் கலையரங்கம்

### புலிகளின் குரல் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைவேள்வியில் ஆகுதியாகியதளபதி கேணல் கிட்டு, போராட்டத்தில் புதிய பரிணாமத்தைப் படைத்த லெப்ரினன்ட்கேணல் திலீபன் ஆகியோரின் நினைவாக நல்லூர் திருவிழாவையொட்டி புலிகளின் குரல் நிறுவனத்தால் சிறப்புக்கலையரங்கம் நடத்தப்படவுள்ளது.

நாளை முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரையிலான 5 தினங்கள் நல்லூர் வீதியில் இடம் பெறவுள்ளஇச் சிறப்புக் கலையரங்கத்தில் தமிழீழத்தின் புகழ்பெற்ற கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர். (உ)

# குடாநாட்டின் சுவர்களில் வர்த்தக விளம்பரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்-கண்டி வீதி திறக்கப்பட்டதை அடுத்து குடாநாட்டின் பல பாகங்களிலும் வர்த்தக விளம்பரப்பலகைகளும், சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுவருகின்றன.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் சண்கவர் விளம்பரங்களே இவ்வாறு சுவர்களிலும், மதில்களிலும ஒட்டப்படுகின்றன

தமது நிறுவனங்களின் தரத்தை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் குடாநாட்டின் பிரபல்யம் வாய்ந்த இடங்களில் இவ்வாறான சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக அரச, தனியார் நிறுவனங்கள் போட்டிபோட்டு இம்முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

தற்போதைய அரசியல் தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் சிற்றி ஹோலில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் இடம்பெறவுள்ளது. (க-19)

# எமது நியமனங்கள் நிரந்தரமாக்கப்படாமையே சங்கங்கள் உருவாகக் காரணம்

## அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் தெரிவிப்பு

(காரைநகர்)

அகில இலங்கை ரீதியாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் உருவாக்கப்பட்டதன் காரணம் எங்கள் நியமனங்கள் நிரந்தரப்படுத்தாமல் ஏமாற்றப்பட்டமையே ஆகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அகிலஇலங்கைசமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க தலைவர் பிலியந்த ரூபசிங்கா நேற்று யாழ் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ் மாவட்ட சமுர்த்தி சங்கத்தினை அகில இலங்கை தாய்ச்சங்கத்துடன் இணைக்கும் செயற்பாட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத்தலைவர் எஸ் சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அகில இலங்கை தாய்ச்சங்க தலைவர், செயலாளர் உட்பட்ட 9 பிரதிநிதிகளும் யாழ்மாவட்ட சமுர்த்தி ஆணையாளரும் யாழ் மாவட்ட 14 பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

1995 ம் ஆண்டு காலப்பகுதியில் மிகக் குறைந்த 2 ஆயிரம் ரூபா சம்பளத்துடன் வேலையில் சேர்க்கப்பட்டோம் ஆனாலும் உரிய காலம் தவறியும் எமது வேலை நிரந்தரமாக்கப்படவில்லை இந் நிலையில் பிரதேச செயலக ரீதியாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கம் அமைக்கப்பட்டு எமக்கென ஒரு பலமான அமைப்பினை உருவாக்கினோம்.

ஆனாலும் எமது வேலையை நிரந்தரமாக்கக்கோரி போராட்டங்களை மேற்கொள்ள இருந்த சமயம் எமது சங்க செயலர் ஜகத்குமார் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டார். ஆனாலும் துணிந்து நின்று போராடி எமது வேலைகளை நிரந்தமாக்கினோம்.

1998 ம் ஆண்டு 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எமது உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என ஊர்வலம் செய்யவிருந்த வேளை அரசு அதனை தடை செய்தது அதற்கு எதிராக தொழிலாளர்களின் ஊர்வலத்தை தடை செய்வது அவர்களின் உரிமையை மறுக்கும் செயல் என்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து அரசிடம் இருந்து 3 இலட்சம் ரூபா குற்றப் பணமும் பெற்றோம் அரச அதிகாரிகள் எந்த நிலையிலும் உங்களை வேலை நீக்கம் செய்வோம் என மிரட்டினாலும் அதேபோல் எந்நேரமும் உங்களை மீண்டும் உள்வாங்கலாம் ஆதலால் யாழ் மாவட்ட உத்தியோகத்தர் ஆகிய நீங்களும் உங்கள் கடமையை திறமையாக செய்யும்போது ஏற்படும் அநீதிகளிற்கு நாங்களும் குரல் கொடுப்போம் என்று உறுதியளித்தார். (க-246)

# தன்னம்பிக்கை

துணிவு இல்லாமல் மகிழ்ச்சியை இழந்து அவர்கள் தவிக்கின்றனர்.

பிள்ளைகளை வளர்க்கத் தெரியாதவர்கள் இந்தக் காலத்தில் ஏராளமாக இருக்கிறார்கள். பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்று அறியாத தாய்மார்கள் தங்களது பிள்ளைகளை அச்சுறுத்தியோ அடித்தோ வளர்த்துவிட்டால், பிறகு தங்கள் மனதிற்குள்ளே தங்கள் பிள்ளைகளுக்குத் துன்பம் விளைவித்து விட்டதாக எண்ணிக் கண்டதையெல்லாம் தங்கள் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து அவர்களைக் கெடுத்து விடுகிறார்கள். இது மட்டுமின்றி சிலர் பிள்ளைகளின் மீதுள்ள அளவுக்கு மிஞ்சிய அன்பினால் அடிக்கடி அவர்களை அணைத்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட அன்பு எதிர்காலத்தில் அந்தக் குழந்தைகளுக்கு அளவு கடந்த தீமையைப் பயக்கின்றன.

### துன்புற்ற சிறுவர்

பெற்றோர்களால் வளர்க்கத் தெரியாமல் அச்சுறுத்தி வளர்க்கப்பட்ட பிள்ளைகள், தங்களையே நொந்து கொண்டு வாழ்க்கையையும் சலித்துக் கொண்டு வளர விருப்பமில்லாமல் வளர்ந்து வருகின்றனர். இதெல்லாம் வாழ்வா? துன்புறுத்தப்பட்டு வளரும் பிள்ளைகள் எப்போதும் தங்கள் பெற்றோர்களின் உதவியுடன், பெற்றோர்களின் தயவிலேயே வாழ வேண்டும் என்று எண்ணுவதால் அவர்களின் முன்னேற்றங்கள் பெரிதும்கெடுகின்றன. பின்னால் அவர்களால் எதையும் செய்ய முடியாது. தன்னைத்தானே நம்பும் தன்மையைஇழந்து தனதுஉணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல், தாழ்வு மனப்பான்மையுடன் இருப்பவர்கள் பெரும்பாலும் பெற்றோர்களின் அச்சுறுத்தலுக்குச் சிறிய வயதில் ஆளானவர்களே!

தண்ணீருக்குள் மூழ்கியிருப்பவன் முதலில் தலையை மட்டும் வெளியே தூக்குவதைப் போல் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டவர்கள் முதலில் சிறிய வயதில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை மறந்து வாழ்க்கையைச் சமாளிக்க உறுதி கொள்ள வேண்டும். சிறிய வயதில்துன்பத்திற்கு ஆளானவர்களின் மனத்திற்குள்ளே துன்பமும் நம்பிக்கையின்மையும் வேதனையும் புதைந்து கிடக்கின்றன. இந்த மூன்றையும் நாம் தேடிப்பார்த்தால் தான் அவை மெல்லத்தலை தூக்குமே தவிர அவைகளாகவே தலையைத் தூக்கி நம்மை துன்புறுத்துவது இல்லை அவைகளை நினைத்துக் கொண்டு விட்டால் தான் அடிக்கடி அவைகள் நம் மனதிலே தோன்றி நம்மை மிகவும் நடுங்கவைக்கின்றன.

### மகிழ்ச்சி

துன்பமும், நம்பிக்கையின்மையும் வேதனையும் நம் மனத்தில் புதைந்து கிடந்தாலும் கூட அவைகளைப் போய் நாம் தேடிப் பார்க்கக் கூடாது. அப்படித் தேடிப் பார்ப்பதால், நம்முடைய ஆற்றல் பாழாகிவிடுகின்றது. நம்மை நாமே கண்டித்துக் கொள்ளும் தன்மையை இதனால் தான் நாம் அடைகின்றோம். துன்பத்தையும்நம்பிக்கையின்மையையும் வேதனையையும் கண்டுபிடித்து விட்டவர்களும் கூட, அவைகளுக்காக அஞ்ச வேண்டியதில்லை. காலையில் எழுந்ததும் இன்று நம்முடைய நாள் எப்படி? இன்று வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் கழிப்பதா துன்பத்துடன் கழிப்பதா? மகிழ்ச்சியுடன் கழிக்கவே நான் விரும்புகிறேன் என்று எண்ணி முடிவு செய்ய வேண்டும். இப்படி முடிவு செய்துவிட்டால் அப்புறம் அன்று முழுவதும் மகிழ்ச்சி தானே.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுமே மகிழ்ச்சியுடன் தான் வாழ விருப்புகிறான். விடிந்து எழுந்ததும் அன்று எப்படி இருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறானோ அப்படியே தான் அவன் அன்று முழுவதும் இருக்கிறான். நாம் எண்ணியபடி நம்மால் வாழ முடியுமா? நாம் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று எண்ணினால் மகிழ்ச்சியை காணமுடியுமா? என்று பல வேளைகளில் நமக்கு ஐயம் உண்டாகலாம். நமது எண்ணங்கள் தாம் நமது வாழ்க்கையை உருவாக்குகின்றன என்ற உண்மையைநாம்மறந்துவிடக்கூடாது. எனவே, நாம் எந்தக்காலத்திலும் ஐயமின்றி நமது வாழ்வை நாம் நினைக்கிறபடி நடத்தலாம்.

சுற்றுப்புறத்தால் துன்புறுபவர்கள் அந்தத்துன்பத்தை மாற்றமுடியாது என்று எண்ணக்கூடாது. ஓர் அறையில் பச்சைவிளக்கை ஏற்றிவைத்தால் '' அந்த அறையில் எல்லாப் பொருள்களும்பச்சையாகவே தெரிகின்றன. ஆகையால் அந்தஅறையில் உள்ள பொருள்கள் அனைத்தும் பச்சை நிறம் உள்ளவைகளாகவே மாறிவிட்டன என்று நாம் சொல்ல முடியுமா? முடியாது! இதைப்போலவே, சிவப்பு விளக்கு ஏற்றிவைத்தால் எல்லாப் பொருள்களும் சிவப்பு நிறமாக நமக்குத்தெரிகின்றன. ஆனால் எந்தக் காலத்திலும் அங்கேயுள்ள பொருள்கள் தங்கள் உண்மையான நிறத்தை இழந்துவிடுவதில்லை. இதைப்போலவே நாமும், எப்படிப்பட்டசுற்றுப்புறத்திலும், துன்பத்திற்கு அடிமையாகாமல், நம்முடைய நிலையிலேயே நாம் நிற்க வேண்டும். அப்போது தான் சலிப்பும், கசப்பும், வேதனையும் நம்மை எதுவும் செய்யா!

நம்முடைய தகுதியை நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். நம்முடைய செயல்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால். எப்போதும் சுற்றுப்புறத்துக்கு நாம் அடிமையாகாமல், வாழ்க்கையில் வலிப்படையாமல், வேதனையடையாமல் ஊக்கமுடன் உற்சாகத்துடன் எப்போதும் என்றும் நாம் வாழமுடியும்.

# பொதுமக்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து அறிக்கை

(காரைநகர்)

காரைநகரில் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து காரைநகர் பொது அமைப்புக்களும், கடற்றொழிலாளர்களின் சமாசமும் கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளன.

மேற்படி கண்டனஅறிக்கைகளில், அண்மையில் ஊரி, பிட்டியெல்லை பிரதேச வீதியால் சென்றுகொண்டிருந்த இருபாடசாலை மாணவர்கள் உட்பட 8 பொதுமக்களை கடற்படையினர்வழிமறித்து தடிகளால் தாக்கியும் சப்பாத்துகால்களால் உதைத்தும் தமது அடாவடித்தனத்தைக் காட்டியுள்ளனர்.

இச்சம்பவமானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுவதாகும். சமாதானத்திற்கான சுமுகமான நிலைமை தோன்றும் போது இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதுபோன்ற சம்பவங்கள் மேலும்தொடராவண்ணம்உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வாறு எடுக்கத் தவறும் பட்சத்தில்கடற்படையினரின் இச்செயலைக் கண்டித்து கண்டன ஊர்வலங்களையும் மறியற்போராட்டங்களையும் நடத்த வேண்டி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ 246)

# நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தினரால் மிகவும்பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ள ''ஸ்பாட்டக்கஸ்'' நாடக ஆற்றுகை அநேக ரசிகர்களின் விருப்பத்திற்கிணங்க இன்றும் நடைபெறவுள்ளது

(க-3)

# தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் நடத்திவரும் சிறப்பு நிகழ்வுகளில் இன்று மாலை 7.00மணி தொடக்கம் 8மணி வரை சிவனருட் செம்மல், பிரசங்க பூசணம் பிரம்மஸ்ரீ சாரைகு சிவராஜசர்மா அவர்களின் ''இல்லை என்னாத இயற்கை'' என்னும் தலைப்பிலான தெய்வீக பேருரை இடம் பெறவுள்ளது. (க-8)

# தாய்லாந்தில் இருந்து மலிவான விலையில் துப்பாக்கி ரவைகள்

## அரசு தரப்பு முயற்சி

(கொழும்பு)

இலங்கை இராணுவம், பொலிஸ்படை ஆகியவற்றில் பயிற்சிக்குப் பயன்படுத்துவதற்காக மலிவான விலையில் துப்பாக்கி ரவைகளை தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்ய இலங்கையரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

அவை மேலும் தெரிவிக்கையில்;

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று மலிவான விலையில் துப்பாக்கிகள், குண்டுகள் என்பவற்றையும் பாதுகாப்பு படையினருக்கு உதவும்குண்டு துளைக்காத தலைக் கவசங்கள், மார்புக் கவசங்கள், குண்டுதுளைக்காத தொப்பிகள் போன்றஉபகரணங்களையும் இத் தொழிற்சாலை தயாரித்து வருகின்றது.

இத் தொழிற்சாலையிலிருந்தே துப்பாக்கி ரவைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அரசு - விடுதலைப்புலிகள் ஆகியோருக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு சமாதான முன்னெடுப்புகள் இடம் பெற்று வருகின்ற இச்சூழ்நிலையில் இத்தகைய நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருவது குறித்துபல்வேறுதரப்பினராலும் பலத்த அதிருப்தி வெளியிடப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-3)

# ஜனசக்தி இன்சுரன்ஸ் மாவட்டக்காரியாலயம் நேற்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி இன்சுரன்ஸ் நிறுவனத்தின் மாவட்டக் காரியாலயம் நேற்றுக்காலை 8.15 மணியளவில் ஜனசக்தி நிறுவனத்தின் நிர்வாகப்பணிப்பாளர் சந்திரா காவ்டாவினால் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள மேற்படி காரியாலயத் திறப்புவிழாவை ஒட்டி அவ் வீதியில்பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். சனரக வாகனங்கள் போக்குவரத்து எவையும் குறிப்பிட்டவேளையில் அனுமதிக்கப்படவில்லை.

முத்தையா முரளிதரன் மற்றும் முன்னைய கிரிக்கெட் ஆட்டக்காரர்களான களுவிதாரண அரசித பெரேரா ஆகியோரும் இந்நிகழ்விற்கு வருகை புரிந்தனர்.

இவ் வீரர்களது வருகையையொட்டி பாடசாலை மாணவர்கள், கிரிக்கெட் ஆர்வலர்கள் பலரும் பெருமளவில் திரண்டிருந்தனர்.

ஜனசக்தி இன்சுரன்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர், பொது முகாமைகாளர், பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட பிரமுகர்கள்பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-19)

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை நில்லாது நீங்கி விடும்.

குறள்

வலம்புரி

## சந்தர்ப்பம் கிடைக்குமா!

ஜன சக்தி காப்புறுதி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் அவரோடிணைந்த கிரிக்கெட் குழுவினரும் நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்ட கிரிக்கெட் குழுவினருடன் விளையாடினர்.

இலங்கையின் கிரிக்கெட் அணியில் இடம் பெற்றுள்ள ஒரே ஒரு தமிழர் என்ற பெருமைக்குரிய முரளிதரன் சர்வதேச ரீதியில் சுழற் பந்து வீச்சில் தனக்கென தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

அவரது உயர்ச்சியைத் தமிழினம் பாராட்டுகிறது.

இதேவேளை அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவோ, யாழ்ப்பாணத்து கிரிக்கெட் வீரர்களுக்கு ஆலோசனை வழங்கவோ முடியாத சூழ்நிலை நிலவியது. எனினும் அவர் தற்போது யாழ்ப்பாணம் வருகை தந்திருப்பது ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டிற்காயினும் வந்தவர் முரளி என்பதால் அது யாழ்ப்பாண கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. முரளியின் வருகை மூலம் சர்வதேச கிரிக்கெட்வீரர்களுடன் யாழ்ப்பாணத்தின் கிரிக்கெட் வீரர்களும் போட்டியிடக் கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் போட்டிகளில் மிகச் சிறந்த வீரர்கள் இருந்தபோதிலும் இனத்தின் பேரால் அவர்கள் இலங்கை கிரிக்கெட் அணியில் இடம் பெற முடியாது போயிற்று. இதனால் அவர்களின் திறமைகள் சர்வதேச மைதானங்களில் பரிணமிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இனவாதப்போக்கு நீக்கப்பட வேண்டுமென்ற கருத்து தற்போது மேலோங்கியிருப்பதால் யாழ்ப்பாணத்தின் சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கு இலங்கை கிரிக்கெட் குழுவில் இடம் கொடுப்பதும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அவர்கள் பங்கு பற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதும் அரசின் கடமையாகும்.

இது விடயத்தில் சுழல் பந்து வீச்சாளர் முரளிதரன் உதவுவார் என நம்பலாம்.

# தன்னம்பிக்கை, மனவுறுதி இல்லாதவர்கள் தான் சுற்றுப்புறச் சூழ் நிலைகளால் பேதலிக்கின்றனர்

மனிதர்களின் மனநிலை பொதுவாக அடிக்கடி மாறுகிறது இதனால் தான், இழப்பும், மனவருத்தமும் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் சுற்றுப்புறம்தான். மனம் மகிழ்ச்சியுடன் இருக்கும் போது தான் இந்த உலகத்திற் பிறந்ததற்காகப் பெருமைப் படுகிறோம். மனம் துன்பத்தில் இருக்கும் போது ஏன் இந்த உலகத்தில் நாம் பிறந்தோம் என்று வருத்தப்படுகிறோம். இந்த இரண்டும் இரண்டு எல்லைகள். இந்த இரண்டு எல்லைகளையும் நமது மனம் தொடுகின்றது. ஒருமுறைஇன்பம், மறுமுறை துன்பம் ஆகிய இந்தஇரண்டு எல்லைகளையும் தொடும் நமது மனம் இரண்டா? இல்லை, ஒன்று தான், இந்த ஒரு மனம் தான் ஒரு தடவை இன்பத்தைத் தொடுகிறது. இன்னொரு தடவை துன்பத்தைத் தொடுகிறது.

### சலிப்பும் சோர்வும்

வாழ்க்கையில் ஏக்கம் ஏமாற்றம், துன்பம் ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கின்றன. இவைகளினால் மனிதன் சோர்வடைந்து விடுகின்றான். இதனால் ஏற்படும் மனச்சோர்வு விரைவிலேயே நமது உடலையும்தாக்குகிறது. இந்தச்சோர்விலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள, நாம் வழி காணவேண்டும், இல்லாவிட்டால், ஏக்கத்துக்கும் ஏமாற்றத்துக்கும், துன்பத்துக்கும் நாம் ஆளாகிநாம்அழியவேண்டும். மனச் சோர்வு ஏற்படும் போது நமக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்படுகிறது. மனத்தில் சலிப்பு ஏற்பட்டால்இந்த உலகத்தில் நாம் எதற்காக வாழ்கிறோம். இந்த உலகத்தில் நமக்கென்று என்னஇருக்கிறது. எதிலுமே நமக்கு உற்சாகமில்லையே, இப்படியே எத்தனை நாட்களுக்குத்தான் நாம் நம் வாழ்க்கையைத்தள்ளிக் கொண்டிருப்பது என்று நாம் எழுந்திருக்கக் கூடமுடியாமல்படுத்தேகிடக்கிறோம்.

இப்படிப்பட்ட இந்தச் சோர்வும், இந்தச் சலிப்பும் நமக்கு எப்போது, எந்த நேரத்தில் ஏற்படும் என்று சொல்லமுடியாது. சலிப்பும், சோர்வும் எந்த நேரத்திலும்எதிர்பாராமல் தோன்றி, நம்மைத்திணறவைக்கலாம். இந்தத்திணறலிலேயே பலர் தொடர்ந்து தவித்துக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். ஒரு சில நாட்கள் மட்டுமல்ல, ஒருசில மாதங்கள் வரை கூடஇந்தத் திணறல் வாட்டி வதைக்கும். பொதுவாகச் சலிப்பிலும், சோர்விலும்சிக்கியவர்களுக்கு எதிலும் ஊக்கம் இராது யார் என்ன செய்தாலும், அது பைத்தியக்காரத்தனம் என்று தான் இவர்களுக்குத் தோன்றும். இதற்கெல்லாம் தலையாய காரணம் என்ன? நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நமதுசுற்றுப்புறம்தான். நமது சுற்றுப்புறத்தை நாம் புரிந்து கொண்டு, நமக்கிருக்கிறசலிப்பையும், சோர்வையும் போக்கிக் கொள்ள எண்ணினால், நம்மையும் அறியாமல் இந்தச் சுற்றுப் புறம் நம்மைக்கை விட்டுவிடுமோ என்ற அச்சம் மிக இயற்கையாக எல்லாருக்கும் தோன்றும். ஆகையால், இப்படிப்பட்டஅச்சத்தைநாம் விரட்ட வேண்டும். இந்தத் தீப அச்சத்தை விரட்டத்தன்னம்பிக்கையும், மனஉறுதியும் பெற வேண்டும். தன்னம்பிக்கையும் மன உறுதியும் இருப்பவர்களுக்கு நல்ல சுற்றுப்புறம் அமையும். நல்ல சுற்றுப்புறமும் சூழலும் அமைந்து விட்டால், அப்புறம் அவர்களுக்கு எப்போதும் உற்சாகந்தான்!

**தமிழ்வாணன்**

### தன்னம்பிக்கையும் மனவுறுதியும்

தன்னம்பிக்கையும் மனவுறுதியும் இல்லாதவர்கள் தாம், நம்மையும் அறியாமல் நாம் தவறுகள் ஏதாவது செய்து கொண்டிருக்கிறோமோ? என்று அஞ்சுவார்கள். எதற்கும், எப்படிப்பட்ட சுற்றுப்புறத்துக்கும் நாம் துணிந்துநின்றால், இந்த அச்சத்தை மிக விரைவில் நாம் அடித்துவிடலாம்! மற்றவர்களைப்பற்றி, அவர்களைப் பார்க்கும் போதும், பேசும் போதும் நாம் என்ன எண்ணுகிறோமோ, அதைப் போலவே நாம் நம்மைப் பற்றியும்எண்ணவேண்டும். அப்போதுதான் நாம் தவறுகளைச்செய்யாதுஇருக்க முடியும். மற்றவர்கள் செய்யும் தவறுகளை நம்மையறியாமல் நாமும் செய்ய நமக்குவாய்ப்பு உண்டு. இதைப் பெரும்பான்மையானவர்கள் உணராத காரணத்தினால் தான், இன்று உயரவழியின்றி அவர்கள் தவிக்கிறார்கள்.

ஒருவன் தவறு செய்து விட்டால், உடனே நாம் என்ன செய்கிறோம்? ஆள் காட்டிவிரலைக் காட்டி, அதோ அவன் தவறு செய்துவிட்டான்என்று குற்றம் சாட்டுகிறோம் அதே நேரத்தில், நம்முடைய ஆட்காட்டி விரல், குற்றம் செய்தவனைச்சுட்டிக்காட்டியபோதிலும், மூன்றுவிரல்கள், நம்மையும் அறியாமல் நம்மைச் சுட்டிக் காட்டுகின்றன. இதை நாம் எண்ணிப் பார்க்கிறோமா? இல்லை. நாம்ஒரு விரலைச் சுட்டிக் காட்டினால் நம்மை நோக்கி மூன்று விரல்கள் சுட்டிக் காட்டுகின்றன. இதை நாம் உணருவதில்லை. அந்த மூன்று விரல்களும் அவனைப் போல் நீயும் எத்தனையோதவறுகளைச் செய்திருக்கிறாய் என்றே காட்டிக் கொண்டிருக்கின்றன என்பது மனதத்துவ நிபுணர்களின் கருத்து ஆகையால் மற்றவர்கள் தவறு செய்து விட்டால் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குற்றஞ் சாட்டி அவர்களை இழிவபடுத்தக் கூடாது. ஒருவனை இழிவு படுத்துவதனால்எந்தக் காலத்திலும் அவன் திருந்த மாட்டான். நாமும்முன்னேறி விடமாட்டோம்.

### அழுகையும் துன்பமும்

ஒருவன் அழுது கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் எதற்காக அழுகின்றான் என்பது நமக்குத் தெரியாவிட்டாலும் ஒரே ஓர் உண்மை மட்டும் மிகத்தெளிவாக நமக்குத்தெரிகிறது. அவனால்துன்பத்தைத் தாளமுடியவில்லை. அதனால் அழுகிறான் இல்லையா? எவராலும் மறுக்கமுடியாதமெய் நாம் அழாவிட்டாலும் கூட, பல வேளைகளில் துன்பத்தால் அவன் அழும் அதே நிலையில் தான் நாமும் மனச்சோர்வினாலும் சலிப்பினாலும் துன்பம் கொள்கிறோம் என்பதை நாம் உணரவேண்டும். அவன் அழுகிறான். நாம் அழவில்லை அவ்வளவு தான் அழுதால் தான் துன்பம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது என்று பொருளா? இல்லை. நாம் அழாமல் இருந்தால் கூடநமக்குத்துன்பங்கள்இருக்கின்றன. துன்பத்தால் அழுகிறவர்கள் அழுது கொண்டேயிருப்பார்கள். நீண்டநேரம் அழவேண்டும் போல் இருக்கும் அவர்களுக்கு தொடர்ந்து அழுத பிறகுதான் அவர்களுக்குச் சற்று ஆறுதலாக இருக்கும். மனச்சுமை குறைந்து விட்டதைப் போல் ஓர் உணர்வு அவர்களுக்கு ஏற்படும்.

இப்படி அழுது கண்ணீர் வடிக்கும் அளவுக்குத் துன்பத்தை நாம் வளர்த்துக் கொள்வது பெரும் தவறு மிகவும் உணர்ச்சிவசப்படுபவர்கள் மட்டுமே அடிக்கடி எடுத்ததற்கெல்லாம் அழுவார்கள். கோழைக்கிணற்றில் ஊறுகிற நீர்தான் இந்தக் கண்ணீர் பெண்கள் எளிதாக உணர்ச்சிவசப்படுபவர்கள் எளிதில் அஞ்சுபவர்கள் என்பதால் தான் அடிக்கடி அவர்கள் அழத் தொடங்கி விடுகிறார்கள் அழுவதால் நமக்கு மனச்சுமை குறைகிறது. ஆகையால் அழுது விடலாம் என்பதுதவறு. நாம் அழுதுகொண்டிருக்கும் நேரத்தில் எதிர்பாராமல் நல்ல மகிழ்ச்சியைத்தரும் செய்தி ஏதாவது வந்தால் நம்மால் அதை அனுபவிக்க முடியுமா? முடியாது.

### ஊக்கம் பெறப்புது வழி

துன்பமும் சலிப்பும் நமக்கு ஏற்படும் போது நாம் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்க மிகப் பாடுபட்டோம். சிறிதும் முடியவில்லையே! இறுதியில் நமக்குஇப்படிப்பட்டதோல்விகள் ஏற்பட்டு விட்டனவே! என்று எண்ணி மேலும் துன்பத்தைப் பெருக்கிக், கொள்கிறோம் இருக்கிற துன்பம் போதாமல், நாம் எப்படி இருக்க எண்ணினோம். எப்படி ஆகிவிட்டோம் என்று நினைத்துப்பார்ப்பதால் மேலும் துன்ப வளருமே தவிர என்றும் குறையாது துன்பத்தைப் போக்க வழியே இல்லை என்று எண்ணுவது தவறு மனச்சலிப்பைப் போக்கித் துன்பத்தைத் துடைத்து வாழ்க்கையில் ஊக்கம் பெறப் புதுவழிகளை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அப்போது தான் நமக்கு உள்ள மனச் சலிப்பையும் சோர்வையும் நாம் போக்கிக் கொள்ள முடியும். எதிர்பாராமல் நமக்கு வாழ்க்கையில் கசப்பும், சலிப்பும் துன்பமும் ஏற்படுகின்றன இவற்றுக்கு காரணம் சுற்றுப்புறம் தான் என்றாலும் இந்தச் சுற்றுப் புறம் எப்படி ஏற்படுகிறது? நோய் என்ன என்பதைக் கண்டுபிடிக்காமல் கண்ணைமூடிக்கொண்டுஎந்த மருந்தைக் கொடுத்தாலும் சரி நோய் குணமாகாது. இதைப்போலவே சுற்றுப்புறங்களுக்குக் காரணம் என்னவென்று கண்டுபிடிக்காமல் எவ்வளவு தான் நாம் முயன்றாலும் மனச் சலிப்பையும் சோர்வையும் போக்க முடியாது. துன்பத்தைத் துடைக்க முடியாது.

வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்ந்தே தீர வேண்டும். எப்படிப் பட்டதுன்பமும் நம்மை நெருங்க முடியாது என்று எண்ணி வாழ்பவர்களைக் கூட, மனச்சலிப்புச்சிலவேளைகளில் ஆட்டி வைக்கிறது. ஏன் இப்படி? மனதத்துவ நிபுணர்கள் இதைப்பற்றிப் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவு; பொதுவாக வாழ்க்கையில் ஒருவனுக்குச் சிறிய வயதில் ஏற்பட்ட துன்பந்தான் இப்படிஅடிக்கடி அவன் மனதில் சலிப்பையும், கசப்பையும் உண்டாக்கி வருகிறது என்பது தான்.

### அன்புக்கான ஏக்கம்

சிறியபிள்ளைகளாகஇருந்த போது ஏற்பட்ட துன்பங்களும் கூட வளர்ந்த பிறகு பெரிதும் மனிதர்களைத் துன்புறுத்துகின்றன பிறந்தவுடன் தாய்ப்பால் அருந்துவதிலும் தாயின் அணைப்பில் கிடப்பதிலுமே பிள்ளைகள் மகிழ்ச்சியைக் காண்கின்றன சிறுபிள்ளைகளுக்குப் போதிய தாய்ப் பால் கிடைக்காவிட்டால் அவைகள் பெரிதும் ஏமாற்றமடைந்து துன்பமும் அச்சமும் அடைகின்றன. இப்படிப் பட்ட பிள்ளைகள் வளர்ந்தபின், எப்படிப்பட்ட சுற்றுப் புறங்களிலும் மிக எளிதில் உணர்ச்சி வசப்பட்டு, வாழ்க்கையில் சலிப்பையும் கசப்பையும் அடைந்து விடுகின்றனர். பிள்ளைகளை அன்புடன் நாம் வளர்க்க வேண்டும். அன்பு சிறிதும் கிடைக்காத பிள்ளைகள் அன்புக்காக ஏங்கியே வளர்கின்றன. இதனால் அந்தப் பிள்ளைகள் சலிப்புக் கொள்கின்றனர். வாழ்க்கையில் தாங்கள் தாழ்ந்து விட்டதாக நினைக்கின்றன. தவறு விட்டதைப் போல்அச்சங் கொள்கின்றனர் இதனால் எதிர் காலத்தில் வாய்ப்புக்கள் அவர்களுக்குக் கிடைத்தாலும் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளத்

( 6ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### அகம்பாவம்

அகம்பாவம் உடையவன் அறியாமையைத் தான் விரும்புகின்றான். தனது முட்டாள் தனத்தைப் பற்றி பெருமையாய் பேசுகிறான். அழியக் கூடிய தன் உடலுக்குமிக முக்கியத்துவம் தருகின்றான். இதன் காரணமாக தானாகவே ஆபத்தாகிய காற்றிலும், பகையாகிய புயலிலும், விதி மற்றும் துயரங்களின் தாக்குதலிலும் அகப்பட்டுக் கொள்கிறான். இப்படிப் பட்டவனுக்கு நிலைத்தலநன்மையும், மேலான பேரின்பம் தரும் வீடுத் தலைவாசலில் நுழைய அனுமதியில்லை. அகம்பாவம் இன்றி இறைவனைச் சரணடைபவன் எல்லாச் சக்தியும், ஆற்றலும் நிறைந்தவனாவான். இவன் வீடு பேற்றை விரைவில் அடைகிறான்.

சுவாமி சிவானந்தர்.

# தமிழ்த்தினப் போட்டிகளில் யாழ் மாவட்டம் முன்னணி

வடக்குக்கிழக்கு மாகாண தமிழ் தின விழாவினை ஒட்டி நேற்று வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற 12 நிகழ்ச்சிகளுக்குரிய போட்டியில் யாழ் மாவட்ட பாடசாலை முன்னணியில் இருப்பதாக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளைச் சேர்ந்த 1200 மாணவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற 12 போட்டிகளில் யாழ் மாவட்ட பாடசாலைகள் முன்னணியில் திகழ்வதாகவும் அடுத்ததாக கல்முனையும் அதற்கடுத்ததாக திருகோணமலையும் முன்னணியில் திகழ்வதாகவும் மேலதிக கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்று இறுதிப்போட்டிகள் நடைபெறவுள்ளது. (ம)

# ஜனநாயக விரோதத்தை அரசு தொடர்ந்தால் ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்துவார்

## எச்சரிக்கின்றார் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த

(கண்டி)

தற்போது ஆட்சியிலிருக்கும் ஐக்கியதேசிய முன்னணி அரசு ஜனநாயக விரோதப் போக்கை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருமானால் ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகிக்க வேண்டிவரும் என எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக்கு முடிவுகட்டும் முதலாவது செயற்பாடு நேற்று கண்டியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,மறைந்த தலைவர் எஸ்.டபிள்யு ஆர்.டி.பண்டார நாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கண்டியிலேயே ஆரம்பித்து வைத்தார். ஐக்கிய தேசியமுன்னணி அரசு கூறி வருவது போல் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் எந்தவிதமான பிளவுகளும் இல்லை.

கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த ஆணைக்கு மதிப்பளித்து ஐக்கிய தேசிய முன்னணியினரிடம் ஆட்சியை நாம் ஒப்படைத்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

### வடமராட்சி...

கணனிகள் ஐந்து, வானொலிப்பெட்டி, பிரதியெடுக்கும் இயந்திரம், பிரின்டர் தொலைநகல் இயந்திரம், சுழல் நாற்காலி, மின்விசிறிகள் ஆகியவை அடித்து நொருக்கப்பட்டுள்ளதாக பிரதேசசபைத் தலைவர் ந.ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய கட்டத்திறப்பு விழா திட்டமிட்டபடி இன்று நடைபெறுமென்று மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. (த-23-42-43)

### அரசின்...

நீக்கம் குறித்து அமைச்சர் தேரருக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

சுமார் 1 மணி நேரம் இச்சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

### பிரதேசசபை...

சேதமாக்கப்பட்டுள்ளது. இங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டி வீடியோ டெக் என்பன காணாமற்போயிருப்பதுடன் தட்டச்சு இயந்திரமும் கணனிகள் போன்றனவும் சேதமாக்கப்பட்டுள்ளன. புதிய அலுவலகக் கட்டடம் முழுவதும் கழிவு ஓயில் ஊற்றப்பட்டு அசிங்கப்படுத்தப்பட்டுள்ளது. கண்ணாடி யன்னல்கள் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளது. நள்ளிரவு வேளை வாகனமொன்றில் வந்த புலிகள் இயக்க உறுப்பினர்களே காவலாளியைத் தாக்கி அவரது கண்களையும் வாயையும் துணியினால் கட்டிவிட்டு இவ்வளவு அட்டகாசத்தைப் புரிந்துள்ளனர். (இ)

### சமாதானப்பேச்சு...

பின்னால் ஏற்படும் சமாதானத்தின் மூலம் இடைக்காலநிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைப்பதை நான் விரும்பவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பான அமைச்சரவையின் தீர்மானம் நான் பங்குபற்றாத அமைச்சரவைக் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார். (ம)

### முரளி...

ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்றது.

சளைக்காது துடுப்பெடுத்தாடிய யாழ் அணி 7விக்கெட் இழப்பிற்கு 178 ஓட்டங்களைக் குவித்தது.

முரளிதரன் நேற்றைய ஆட்டத்தில் சிறப்பாக ஆடியபோதும் 3ஓட்டங்களைகளையே பெற்றிருநதார்.

அத்துடன் தனது அபார பந்து வீச்சினால் யாழ் வீரர்களின் எந்தவொரு விக்கெட்டுக்களையும் முரளி பெற்றுக்கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சர்வதேச ஆட்ட வீரர்களான களுவிதாரண வேகப் பந்துவீச்சாளர் ருசித பெரேரா ஆகியோரும் போட்டியில் சிறப்பாக ஆடினர். (இ)

### பிரதமரின்...

பாதையூடாக கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

பேச்சுவார்த்தைக்கு முன்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி மீட்புப்பணிகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்கள் செயற்பாடுகளைப் பாராட்டினார்.

நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பிரமுகர்கள் தங்கன் மற்றும் விசு ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)






யாழ் நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள (04-09-2002)
டயலொக் (DIALOG.GSM) கையடக்க தொலைபேசி,
இணைப்புக்களை பெற்றுக்கொள்ள விரையுங்கள்

**ACX**
துரித வான் தபால், பொதி
விநியோக சேவை
இல. 8 நவீன சந்தை
மேல்மாடி யாழ்ப்பாணம்
T.P - 021-2405
077-519440

**THE PHONE SHOP**
[கடை விற்பனை நிலையம்]
பலாலி வீதி,
திருநெல்வேலிச்சந்தி
யாழ்ப்பாணம்

**ஜெயா அழகுமாடம்**
149 நவீன சந்தை
யாழ்ப்பாணம்
T.P 021-2171

கையடக்க தொலைபேசி கையாளல் தொடர்பாக, தகவல் பதிவு சம்பந்தமான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.


### அனுருத்த...

மைக்காகவும் லஞ்ச ஊழல் திணைக்களத்திடம் முறைப்பாடுகள் செய்யப்படவுள்ளன. தனது சொத்துக்களை எம்.பியொருவர் வெளிப்படுத்தாது இருந்தால் அதற்காக ஏழுவருடங்கள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். ஆனால் கடந்த வரவு செலவுத்திட்டத்தில் இன்றைய அரசு வழங்கிய மன்னிப்பைப் பயன்படுத்தி அவர் தனது சொத்துக்களை பிரகடனஞ் செய்யக்கூடும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந)

### தலைநகர்...

மங்கள் தோறும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் மக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழு அண்மையில் தமது குழுக்கூட்டத்தில் புலிகள் அமைப்பின் தடைநீக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# திருநெல்வேலியில் தாலிக்கொடி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு நேற்றிரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த குடும்பப் பெண்ணை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தள்ளி விழுத்தி விட்டு அவரது தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டனர்.

திருநெல்வேலி சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே வீதியில் வசிக்கும் த.சொர்ணலக்சுமி என்பவரின் தாலிக்கொடியே அபகரிக்கப்பட்டதாகும்.

பிரஸ்தாப பெண்மணி தள்ளி விழுத்தப்பட்டதால் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கோயிலிலிருந்து பிரஸ்தாப பெண்மணியும் கணவனும் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தவேளை வீட்டிற்கு முன்பாகவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ)


அருள்மிகு லிங்கப்பிள்ளையார் தேவஸ்தானம்

**மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2002**

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 2.9.2002 | திங்கள் | பகல் | 10.00 மணி |
| நாகலிங்க உற்சவம் | 6.9.2002 | வெள்ளிக்கிழமை | மாலை | 6.00 மணி |
| வேட்டைத்திருவிழா | 8.9.2002 | ஞாயிற்றுக்கிழமை | மாலை | 4.00 மணி |
| சப்பறத்திருவிழா | 9.9.2002 | திங்கட்கிழமை | மாலை | 6.00 மணி |
| தேர்உற்சவம் | 10.9.2002 | செவ்வாய்க்கிழமை | காலை | 9.30 மணி |
| தீர்த்தோற்சவம் | 11.9.2002 | புதன்கிழமை | காலை | 9.00 மணி |
| வசந்தோற்சவம் | 12.9.2002 | வியாழக்கிழமை | மாலை | 6.00 மணி |
| வயிரவர்சாந்தி உற்சவம் (அன்னதானம்) | 13.9.2002 | வெள்ளிக்கிழமை | பகல் | 11.00 மணி |

தினமும் இரவு 9.00மணி முதல் 10.00மணிவரை
தெய்வீகப் பேருரை : பொருள் - விநாயகபுராணம்

அடியார்கள் லிங்க விநாயகரின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வழிபாடு செய்து பேரருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நன்றி
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

தர்மகர்த்தாக்கள்

இங்ஙனம்
ச.வைத்தியநாதன்ஐயா
ஆலய பரிபாலகரும் அர்ச்சகரும்






"எனது தந்தை தினமும் குடித்துவிட்டு வந்து எனது அம்மாவையும், எனது தம்பி, தங்கைகளையும், என்னையும் துன்புறுத்துவார். நான் இப்போது பாடசாலைக்குப் போவதில்லை."

அன்பான பெற்றோர்களே! இன்றைய சிறுவர்களே இந்நாட்டின் நாளைய எதிர்காலம். அவர்களைத் துன்புறுத்தி அவர்களது கல்வியை இடை நிறுத்துவதன் மூலம் சிறுவர் உரிமைகளைப் பறிக்காதீர்கள்.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021-2261 EXT - 274.

அனுசரணை:- சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ)


# மரண அறிவித்தல்



## சோதிமுத்து முருகேசு

(ஒலும்பியா 3ம் குறுக்குத்தெரு கொழும்பு 11
சந்தியாமல்ரிக்கோட்யாட், நல்லூர், பண்டத்தரிப்பின் உரிமையாளர்)

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிமுத்து முருகேசு 01.09.2002இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியமலரின் அன்புக்கணவரும் கலாஜோதி (பிரான்ஸ்) மாலாஜோதி(பிரான்ஸ்), ஜோதிமனோகர் (லண்டன்), ஜோதிக்குமார், ஜோதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், தங்கம்மா, அன்னம்மா மற்றும் இலட்சுமி, சின்னத்தங்கம், செல்லக்குட்டி ஆகியோரின் சகோதரனும் நகுலநாதன்(பிரான்ஸ்), குணராஜா (பிரான்ஸ்) சசிகலா, வதனா ஆகியோரின் மாமனாரும் சிரஞ்சீவ், நர்மதா, நிகிந்தா, நிராஜ், சுரேனா, சஜீனா, சஞ்சீவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.09.2002 பிற்பகல் 3.00 மணியளவில்(புதியநேரம்) அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

674, பருத்தித்துறை வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[5873]

தகவல்
மகன்மார்
(சந்தியா மல்ரிகோட்யாட், நல்லூர்)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 02.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.